[9th December 1959

SRI M. C. MUTHUKUMARASWAMY : இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஹரிஜனங்களுக்கு ஹரிஜன வெல்பேர் டிப்பார்ட் மெண்ட்டிலிருந்து கருவிகள் வாங்கிக் கொடுக்கப்படுகிறது. ஜில்லாவுக்கு 4, 5 பேருக்குத்தான் கிடைக்கிறது. அது போத வில்லே. ஆகவே, அரசாங்கமே நேரடியாக உதவி புரிய முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஹரிஜன வெல்பேர் டிப்பார்ட்மெண்டும் அரசாங்கந்தான். ஹரிஜன மக்களுக்காகவே அமைக்கப்பட்டிருக்கும் இலாகா. இந்த கவனிப்பு போதவில்லே யென்ருல் மேற்கொண்டு அரசாங்கம் தொழில் இலாகா மூலம் என்ன உதவி அளிக்க முடியுமோ அது கொடுக்கப்படும்.

Temporary increase in pensions

*63 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப் பாரா—

(அ) ஜி. ஓ. எண் 412, தேதி 20—3—1957 பிரகாரம் பென்ஷன ருக்குக் கிராக்கிப்படி எவ்வளவு? எந்தெந்த இலாகா உத்தியோ கஸ்தர்களுக்கு அளிக்கப்படுகிறது ?

(ஆ) இந்த கிராக்கிப்படி ஆசிரியர்களுக்கும் அளிக்கப்படு கிறதா ? இல்லேயானுல், ஏன் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Under G.O. No. 412, Finance, dated 20th March 1957, all civil pensioners drawing a pension not exceeding Rs. 100 are eligible for a temporary increase in pension of Rs. 6. In the case of persons in receipt of a pension exceeding Rs. 100 but not exceeding Rs. 106 the increase would be such as to make the total Rs. 106.

(*b*) The increase is applicable to teachers who retire from Government service but not to teachers who are eligible for pension under the Madras Teachers' Contributory Provident Fund-Insurance-Pension Rules, 1958. In the case of the latter, the grant of pension is itself a special concession and is governed by the special rules applicable to it.

SRI A. VEDARATHNAM : விலேவாசி ஏற்றம் காரணமாக பென்ஷனர்களுக்கும் கஷ்ட நிலேமை ஏற்பட்டிருக்கிற காரணத்தால் அவர்களுடைய கோரிக்கையையும் அனுதாபத்தோடு அரசாங்கம் கவனிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தன் உத்தியோகத்தில் உள்ள என்.ஜி.ஓ.-க்களுக்குச் சலுகைகள் கொடுக்கவே இங்கு சர்க்காருக்கு பணக் கஷ்டம் இருக்கும்போது பென்ஷனர்களுடைய நிலேமையைக் கவனிப்பது கொஞ்சம் கஷ்டமாக இருக்கும். ஆகவே, இதிலே அதிகமாக சர்க்காரிடமிருந்து எதிர்பார்க்க முடியாது என்றுதான் நினேக்கிறேன்.

9th December 1959]

SRI S. LAZAR : வேலையிலிருந்து ஓய்வு எடுக்கக் கூடியவர் களுக்குப் பென்ஷன் தொகை நிர்ணயிப்பதில் அதிகக் காலதாமத மாகிறது என்பது சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வரப்பட் டிருக்கிறதா ? அதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : This is a new subject altogether.

Madras City hospitals

* 64 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the reasons for increasing the bed strength and other amenities in the Madras City hospitals ; and

(*b*) whether corresponding improvements are made in the mufassal headquarters hospitals?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Almost all the City State Hospitals are overcrowded. This necessitates the increase of bed strength and provision of other amenities in them.

(*b*) Similar improvements have been sanctioned for the hospitals and dispensaries in the mufassal also wherever necessary.

SRI S. LAZAR : ஸார், அபிவிருத்தி என்பதன் பெயரால் புது நவீன இயந்திரங்கள் எல்லாம் நகரங்களிலேயே வைக்கப்படுவ தற்குப் பதிலாக வெளிப்புற நகரங்களிலும் ஏற்படுத்துவதன் காரணமாக "கன்ஜெஷன் ஆப் பாப்புலேஷன்" குறையும் என்ற காரணத்தால் அதை அரசாங்கம் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : நகரங்களிலே எவ் வளவு புது மாதிரி நவீன சௌகரியங்களும் வசதிகளும் கொடுக் கிறோமோ அதே போல் வெளியிலும் கொடுக்கிறோம். இதைப் பற்றி ஒரு புள்ளி விவரம் சொன்னால் தெரியும். வெளியிலே இருக்கும் ஆஸ்பத்திரிகளுக்கு 289 லட்சம் ரூபாய் செலவு திட்டம், இங்கிருக்கும் ஆஸ்பத்திரிக்கு 43 லட்சம் ரூபாய் செலவு திட்டம்.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் மக்கள் தொகை பெருக்கம் எந்த அளவுக்கு வேகமாக ஏறிக் கொண்டு போகிறதோ அந்தப் பெருக்கத்திற்கு ஏற்ற விகிதா சாரத்தில் சென்னை மருத்துவ மனைகளில் உள்ள படுக்கைகள் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறதா ? இல்லாவிட்டால் அது பற்றி அமைச்சர் அவர்கள் கவனிப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : எந்த ஓர் அளவுக்கு முடிகிறதோ அந்த அளவுக்கு படுக்கைகளை அதிகப்படுத்திக்